முருகப்பெருமான் துணை

**மகான் ஆண்டாள் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.01.2022**, திங்கட்கிழமை

1. மானிடா மனபலம் கண்டிட
மரணம் வெல்லும் சக்திபெற்றிட
ஞானிகள் மேல்பற்று வைத்து
ஞான பூசைகள் செய்துவர
2. வருகவே மாற்றம் உண்டென
வழங்கிடுவேன் துல்லிய ஆசி
கருதியே பிலவ கலை திங்கள்
கண்டுரைக்க லாபதிகதி சோமவாரம்
(பிலவ வருடம் தை மாதம் 11ம் நாள், 24.01.2022 திங்கட்கிழமை)
3. வாரமதில் ஆண்டாள் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரம் போக்கும் சன்மார்க்க
சுத்த நெறி வழிகள் தன்னை
4. தன்னையே உலகமக்கள் பின்பற்றி
தன்னுயிர்போல் பிறஉயிர் காத்து
மண்ணுலகில் வாழ்வு காண
மாற்றம் தனை உலகம் காண்கும்
5. காண்குமே எங்கும் தயவுநிலை
கண்ணியமுற மக்களிடை பரவி
ஆன்மீக ஞான பூமியாகவே
அனைவருக்கும் பாதுகாப்பு தருகின்ற
6. தருகின்ற ஞானத்தலைமையாக
தரணியெங்கிலும் அமைந்து
ஆறுமுகனார் அருளாசிபெற்ற
ஆளுமைகளாக மாற்றம் பெறும்
7. மாற்றம் தரும் மகாசக்தியாக
மரணம் வெல்லும் பலமாக
ஆற்றலை தீட்சையாகத் தரும்
அரங்கமகான் அவதாரம் தன்னை
8. தன்னையே உலக மக்களெல்லாம்
தக்க ஞானமாக உணர
மண்ணுலகில் குருவாக ஏற்றுவர
மக்களுக்கு சர்வபலம் கிட்டி
9. கிட்டியே ஞானவான்கள் எனும்
குறைவிலா திடம் பெருகி
தட்டாது வாழுகின்ற காலமே
தனிப் பெருங் கருணை நிறைந்த

10. நிறைந்த ஞானிகள் ஆகி
நிலவுலகில் பிறவா பேறுகண்டு
நிறைந்த ஞான யுகமாற்றம்
நிலமதனில் செய்து நிலைப்பர்

11. நிலைத்தன்மை கொண்டநல்
நீதிமான்களாக வாழ்ந்துமே
உலகமாற்றம் செய்து சிறப்பர்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

1. அன்னையாம் ஆண்டாள் அருளினை போற்றினேன்
அன்னையும் ஆட்கொண்டு எனக்கருள் செய்தாளே!

– முருகனடிமை ஓங்காரக்குடிலாசான்